**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்), தென்காசி**

**முன்னிலை.- திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,**

**கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி**

**2025 ம் வருடம் மார்ச் திங்கள் 5 ம் நாள் புதன்கிழமை**

**இடைநிலை மனு எண் 2/2024**

**அதன்**

**வாரிசுரிமை அசல் மனு எண் 257/2023**

(SOP No. 257/2023)

**(CNR No.TNTS01-001396-2023)**

1. ரேவதி
2. சஞ்சய்குமார் .... புதிய மனுதாரர்கள்/புதியதாக 6.7 எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்க்கப்பட வேண்டியவர்கள்

/எதிர்/

1. ஜெய்பிரகாஷ் ......1 ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்
2. சின்னகந்தசாமி
3. கோசலை
4. கிளை மேலாளர்,
   இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,
   செவல்குளம் கிளை.
5. கிளை மேலாளர்,
   சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா,
   கோவில்பட்டி கிளை.
6. கிளை மேலாளர்,
   திருநெல்வேலி மாவட்ட மத்திய
   கூட்டுறவு வங்கி லிட்., .... 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/
   திருவேங்கடம் கிளை 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்

இந்த இடைநிலை மனுவானது 24.02.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மகேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஒய். ஆசாத் அவர்கள் முன்னிலையாகியும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 3 வது எதிர்மனுதாரர் இறந்து விட்டதாலும், 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் பிரதான மனுவில் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளதாலும், இரு தரப்பு கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசலீனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

இந்த மனுவானது மனுதாரர்கள் தரப்பில் கட்டளை 1 விதி 10 மற்றும் பிரிவு 151 சி.பி.சி கீழ் பிரதான மனுவில் இறந்து போன ராமதாஸின் உடன்பிறந்த சகோதரியான சகுந்தலையின் மகளான 1ம் புதிய மனுதாரரையும், இறந்துபோன ராமதாஸின் உடன்பிறந்த சகோதரரான லேட். ஆதிமூலத்தின் மகனான 2ம் புதிய மனுதாரரையும் அசல் வழக்கில் 6,7 புதிய எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்த்து மேற்படி மனுவினை நடத்த அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது,

**2) மனுவின் சுருக்கம் பின்வருமாறு:**

அசல் மனுவானது 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரரால் உண்மைக்கு விரோதமான சங்கதிகள் கூறி இறந்துபோன ராமதாஸ் என்பவர் 23.06.2023 அன்று பிறப்பித்து வைத்த உயில் ஆவணத்தின்படி அசல் மனு 1வது அயிட்டத்தில் கண்ட தொகையினை 3ம் எதிர்மனுதாரரிடமிருந்தும், மனு 2வது அயிட்டத்தில் கண்ட தொகையினை 4ம் எதிர்மனுதாரரிடமிருந்தும, 3வது அயிட்டத்தில் கண்ட தொகையினை 5ம் எதிர்மனுதாரரிடமிருந்தும் பெற வேண்டி 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரருக்கு வாரிசுரிமை சான்று வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் குறிப்பிடும் 23.06.2023 தேதிய உயில் ஆவணமானது போர்ஜரியான உயிலாவணமாகும். 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் தனது மனுவில் அவரது தாய் சகுந்தலையின் உடன்பிறந்த சகோதரர் ராமதாஸ் என்பவர் கடந்த 02..07.2023 அன்று இறந்த விட்டார், அவர் மனைவி சீதா என்ற சீத்தம்மாள் கடந்த 05.02.2022 அன்று இறந்து விட்டார், மேற்படியார்களுக்கு குழந்தை ஏதும் கிடையாது, மேற்படி ராமதாஸ் என்பவரின் தகப்பனார் சுப்பையா நாயக்கர், தாயார் கிருஷ்ணம்மாள் ஆகியோர்களும் காலாமாகிவிட்டார்கள், அதே போன்று

ராமதாஸின் மனைவி சீதா என்ற சீத்தம்மாளின் தகப்பனாரான வெங்கிடசாமி மற்றும் தாயார் ராமலட்சுமி ஆகியோர்களும் இறந்து விட்டார்கள் என்றும், மேற்படி ராமதாஸ் என்பவரின் மனைவியான சீதா என்ற சீத்தம்மாளுக்கு ராமதாஸ் என்பவர் மட்டுமே வாரிசு என்றும் குறிப்பிட்டுள்ளதில், உறவு முறை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் பொய். இறந்துபோன ராமதாஸ் என்பவரை 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் கவனித்து, பாதுகாத்து, பராமரித்து வந்தார் என்றும், அதனால் மேற்படி ராமதாஸ் 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் மட்டும் தனது வாரிசு என்று குறிப்பிட்டு 23.06.2023 ம் தேதியில் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும், எனவே 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் மட்டும் இறந்துபோன ராமதாஸின் அனைத்து அசையும், அசையாச் சொத்துக்களை அனுபவித்துக் கொள்ள உரிமை உள்ளவர் போல் சான்றிதழ் பெறுவதற்கு மோசடியாக முயற்சி செய்து வருகின்றார் என்பதுதான் உண்மையாகும். உண்மையில் 1ம் மனுதாரரின் தாயாரின் உடன்பிறந்த சகோதரரான ராமதாஸின் தகப்பனார் சுப்பையா நாயக்கரின் மனுவில் கூறியுள்ள கொடிவழி ஜாபிதாவில் கண்ட வாரிசுகளின் விபரங்களை மறைத்தும், ராமதாஸின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகளையே மறைத்தும், 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மேற்படி கொடி வழி ஜாபிதாவினை பார்த்தாலேயே 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் ராமதாஸின் இரண்டாம் நிலை வாரிசுகளை கட்சி சேர்க்காமல் விடுபட்டுள்ள விபரம் தெரியவரும். மனுதாரர்கள் பிரதான மனுவின் அவசிய கட்சிகளாகும், எனவே மேற்படி பிரதான மனுவில் இறந்துபோன ராமதாஸின் உடன்பிறந்த சகோதரியான சகுந்தலையின் மகளான 1ம் மனுதாரரையும், இறந்து போன ராமதாஸின் உடன்பிறந்த சகோதரரான லேட். ஆதிமூலத்தின் மகனான 2ம் மனுதாரரையும் 6, 7 புதிய எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்த்து, மனுவினை மேல் நடத்த அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுவதாக கூறியுள்ளார்.

**<u>3) 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>**

மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது ஆகும். உண்மையில் இறந்துபோன ராமதாஸ் என்பவரின் தகப்பனார் சுப்பையா நாயக்கர், தாயார் கிருஷ்ணம்மாள் ஆகியோர்கள் ராமதாஸ் இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார்கள். மேற்படி ராமதாஸ் என்பவர் சீதா என்ற சீத்தம்மாள் என்பவரை திருமணம் செய்து மேற்படியார்களுக்கு குழந்தைகள் எதுவும் இல்லை. மேற்படி சீதா என்ற சீத்தம்மாள், ராமதாஸ் இறப்பதற்கு முன்பு கடந்த 05.02.2022 அன்று காலமாகிவிட்டார். அதன்பின்பு ராமதாஸ் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை

பொறுத்து 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரருக்கு கடந்த 23.06.2023 தேதியில் உயில் ஆவணம் பிறப்பித்து வைத்து விட்டு, எவ்வித நேரடி வாரிசுகளும் இன்றி 02.07.2023 அன்று காலமாகிவிட்டார், அவர் காலமான பின்னர், மேற்படியார் பிறப்பித்து வைத்த 23.06.2023 தேதிய உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்து மேற்படி உயில் ஆவணத்தின்படியான அசையும்,அசையாச் சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் சர்வ சுதந்திர பாத்தியதையும் அடைந்து அனுபவித்து வருகிறார். மேற்படி உயில் ஆவணம் உண்மையான ஆவணமாகும். மேற்படி உயில் ஆவணத்தின்படியான ராமதாஸ் என்பவருக்கு பாத்தியப்பட்ட அசையும் சொத்துக்களான பிரதான மனுவில் கண்ட வங்கி இருப்புத் தொகைகளை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, இறந்துபோன ராமதாஸ் என்பவரின் சட்டப்படியான இரண்டாம் நிலை வாரிசுகளான, அவர் இறக்கும் காலத்தில் உயிருடன் இருந்து வரும் அவருடைய உடன்பிறந்த சகோதர, சகோதரியான பிரதான மனுவின் 1,2 வது எதிர்மனுதாரர்களையும், அசையும், அசையாச் சொத்துக்கள் இருந்து வரும் வங்கிகளை 3 முதல் 5 எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்த்தும், இறந்துபோன ராமதாஸ் என்பவருக்கு வாரிசுரிமை சான்றிதழ் கோரி 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் பிரதான மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ராமதாசுக்கு முதல் நிலை வாரிசுகள் எவரும் இல்லாத நிலையில் காலமாகிவிட்டார். மேற்படி ராமதாசுக்கு 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் தகப்பனார் கிருஷ்ணசாமி (1), கந்தசாமி (2), பிரதான மனுவின் 1ம் எதிர்மனுதாரரான சின்னகந்தசாமி (3), ஆதிமூலம் (4), பிரதான மனுவின் 2ம் எதிர்மனுதாரரான கோசலை (5), சகுந்தலா (6) ஆகியோர்கள் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் ஆவார்கள். மேற்படியார்களில், 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் தகப்பனார் கிருஷ்ணசாமி மற்றும் கந்தசாமி, ஆதிமூலம், சகுந்தலை ஆகியோர்கள் மேற்படி ராமதாஸ் என்பவர் இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார்கள். மேற்படி ராமதாஸ் 02.07.2023 அன்று காலமானபோது, இந்து வாரிசுரிமை சட்டத்தின் பிரிவு 8ன்படி நிர்ணயிக்கப்பட்ட இரண்டாம் நிலை வாரிசுகள் பட்டியலில், 2 வது ஸ்தான வாரிசுகளில் உயிருடன் இருந்த வரும் மேற்படியாரின் உடன்பிறந்த சகோதர,சகோதரிகள் என்ற ஸ்தானத்தில் பிரதான மனுவில் கண்ட 1,2 எதிர்மனுதாரர்களான சின்னகந்தசாமி மற்றும் கோசலை என்பவர்கள் மட்டுமே மேற்படி இறந்து போன ராமதாசின் சட்டப்படியான இரண்டாம் நிலை வாரிசுகள் ஆவார்கள். அந்த வகையில் அவர்கள் பிரதான மனுவில் சட்டப்படி கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள். அவ்விதம் உயிருடன், சகோதர, சகோதரிகள் எவரும் இல்லாதபோது மட்டுமே, இறந்துபோன சகோதர, சகோதரிகளின் மகன்களோ, மகள்களோ இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8ன் கீழான இரண்டாம் வாரிசு பட்டியலில் IV ஸ்தானத்தின்படி வாரிசுகளாக சட்டப்படி வர இயலும். மேலும் 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர்

பிரதான மனுவில் மேற்படி ராமதாஸ் என்பவரின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் பற்றிய முழு விவரங்களையும், அவர்களில் ராமதாஸ் என்பவர் இறக்கும் காலத்தில் உயிருடன் இருந்து வரும் சகோதர, சகோதரிகள் பற்றிய விபரங்களையும், மேற்படியார் இறப்பதற்கு முன்பே இறந்துபோன சகோதர, சகோதரிகள் பற்றிய விவரங்களையும் முழுமையாக குறிப்பிட்டே தாக்கல் செய்துள்ளார். இறந்துபோன ராமதாஸ் என்பவருக்கு மனுதாரர்கள் சட்டப்படி இரண்டாம் நிலை வாரிசுகள் அல்ல. எனவே அவர்கள் பிரதான மனுவிற்கு அவசிய கட்சியும் அல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி செல்லத்தக்கதில்லை. எனவே மனுவை 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்த உத்தரவிட வேண்டுவதாகக் கூறப்பட்டுள்ளது.

4) இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) தற்போது இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?இல்லையா? என்பதேயாகும்?

<u>6) தீர்வு:-</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், அசல் மனுவானது 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரரால் உண்மைக்கு விரோதமான சங்கதிகள் கூறி இறந்துபோன ராமதாஸ் என்பவர் 23.06.2023 அன்று பிறப்பித்து வைத்த உயில் ஆவணத்தின்படி அசல் மனு 1வது அயிட்டத்தில் கண்ட தொகையினை 3 ம் எதிர்மனுதாரரிடமிருந்தும், மனு 2 வது அயிட்டத்தில் கண்ட தொகையினை 4 ம் எதிர்மனுதாரரிடமிருந்தும, 3 வது அயிட்டத்தில் கண்ட தொகையினை 5 ம் எதிர்மனுதாரரிடமிருந்தும் பெற வேண்டி 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரருக்கு வாரிசுரிமை சான்று வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் குறிப்பிடும் 23.06.2023 தேதிய உயில் ஆவணமானது போர்ஜரியான உயிலாவணம் என்றும், 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் தனது மனுவில் அவரது தாய் சகுந்தலையின் உடன்பிறந்த சகோதரர் ராமதாஸ் என்பவர் கடந்த 02..07.2023 அன்று இறந்த விட்டார், அவர் மனைவி சீதா என்ற சீத்தம்மாள் கடந்த 05.02.2022 அன்று இறந்து விட்டார், மேற்படியார்களுக்கு குழந்தை ஏதும் கிடையாது, மேற்படி ராமதாஸ் என்பவரின் தகப்பனார் சுப்பையா நாயக்கர், தாயார் கிருஷ்ணம்மாள் ஆகியோர்களும் காலாமாகிவிட்டார்கள், அதே போன்று ராமதாஸின் மனைவி சீதா என்ற சீத்தம்மாளின் தகப்பனாரான வெங்கிடசாமி மற்றும் தாயார் ராமலட்சுமி ஆகியோர்களும் இறந்து விட்டார்கள் என்றும், மேற்படி ராமதாஸ் என்பவரின் மனைவியான சீதா என்ற

சீத்தம்மாளுக்கு ராமதாஸ் என்பவர் மட்டுமே வாரிசு என்றும் குறிப்பிட்டுள்ளதில், உறவு முறை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் பொய். என்றும், இறந்துபோன ராமதாஸ் என்பவரை 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் கவனித்து, பாதுகாத்து, பராமரித்து வந்தார் என்றும், அதனால் மேற்படி ராமதாஸ் 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் மட்டும் தனது வாரிசு என்று குறிப்பிட்டு 23.06.2023 ம் தேதியில் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றும், எனவே 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் மட்டும் இறந்துபோன ராமதாஸின் அனைத்து அசையும், அசையாச் சொத்துக்களை அனுபவித்துக் கொள்ள உரிமை உள்ளவர் போல் சான்றிதழ் பெறுவதற்கு மோசடியாக முயற்சி செய்து வருகின்றார் என்பதுதான் உண்மை என்றும், உண்மையில் 1ம் மனுதாரரின் தாயாரின் உடன்பிறந்த சகோதரரான ராமதாஸின் தகப்பனார் சுப்பையா நாயக்கரின் மனுவில் கூறியுள்ள கொடிவழி ஜாபிதாவில் கண்ட வாரிசுகளின் விபரங்களை மறைத்தும், ராமதாஸின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகளையே மறைத்தும், 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் பிரதான மனுவின் அவசிய கட்சிகள் என்றும், எனவே மேற்படி பிரதான மனுவில் இறந்துபோன ராமதாஸின் உடன்பிறந்த சகோதரியான சகுந்தலையின் மகளான 1ம் மனுதாரரையும், இறந்து போன ராமதாஸின் உடன்பிறந்த சகோதரரான லேட். ஆதிமூலத்தின் மகனான 2 ம் மனுதாரரையும் 6, 7 புதிய எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்த்து, மனுவினை மேல் நடத்த அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுவதாக வாதிட்டுள்ளார்.

**(ii)** மாறாக 1 ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றும், இறந்துபோன ராமதாஸ் என்பவரின் தகப்பனார் சுப்பையா நாயக்கர், தாயார் கிருஷ்ணம்மாள் ஆகியோர்கள் ராமதாஸ் இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டதாகவும், மேற்படி ராமதாஸ் என்பவர் சீதா என்ற சீத்தம்மாள் என்பவரை திருமணம் செய்து மேற்படியார்களுக்கு குழந்தைகள் எதுவும் இல்லை என்றும், மேற்படி சீதா என்ற சீத்தம்மாள், ராமதாஸ் இறப்பதற்கு முன்பு கடந்த 05.02.2022 அன்று காலமாகிவிட்டார் என்றும், அதன்பின்பு ராமதாஸ் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரருக்கு கடந்த 23.06.2023 தேதியில் உயில் ஆவணம் பிறப்பித்து வைத்து விட்டு, எவ்வித நேரடி வாரிசுகளும் இன்றி 02.07.2023 அன்று காலமாகிவிட்டார் என்றும், அவர் காலமான பின்னர், மேற்படியார் பிறப்பித்து வைத்த 23.06.2023 தேதிய உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்து மேற்படி உயில் ஆவணத்தின்படியான அசையும்,அசையாச் சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் சர்வ சுதந்திர பாத்தியதையும் அடைந்து அனுபவித்து வருவதாகவும், மேற்படி உயில்

ஆவணம் உண்மையான ஆவணம் என்றும், மேற்படி உயில் ஆவணத்தின்படியான ராமதாஸ் என்பவருக்கு பாத்தியப்பட்ட அசையும் சொத்துக்களான பிரதான மனுவில் கண்ட வங்கி இருப்புத் தொகைகளை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, இறந்துபோன ராமதாஸ் என்பவரின் சட்டப்படியான இரண்டாம் நிலை வாரிசுகளான, அவர் இறக்கும் காலத்தில் உயிருடன் இருந்து வரும் அவருடைய உடன்பிறந்த சகோதர, சகோதரியான, பிரதான மனுவின் 1,2 வது எதிர்மனுதாரர்களையும், அசையும், அசையாச் சொத்துக்கள் இருந்து வரும் வங்கிகளை 3 முதல் 5 எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்த்தும், இறந்துபோன ராமதாஸ் என்பவருக்கு வாரிசுரிமை சான்றிதழ் கோரி 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் பிரதான மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி ராமதாசுக்கு முதல் நிலை வாரிசுகள் எவரும் இல்லாத நிலையில் காலமாகிவிட்டார் என்றும், மேற்படி ராமதாசுக்கு 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் தகப்பனார் கிருஷ்ணசாமி (1), கந்தசாமி (2), பிரதான மனுவின் 1ம் எதிர்மனுதாரரான சின்னகந்தசாமி (3), ஆதிமூலம் (4), பிரதான மனுவின் 2ம் எதிர்மனுதாரரான கோசலை (5), சகுந்தலா (6) ஆகியோர்கள் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் ஆவார்கள் என்றும், மேற்படியார்களில், 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் தகப்பனார் கிருஷ்ணசாமி மற்றும் கந்தசாமி, ஆதிமூலம், சகுந்தலை ஆகியோர்கள் மேற்படி ராமதாஸ் என்பவர் இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார்கள் என்றும், மேற்படி ராமதாஸ் 02.07.2023 அன்று காலமானபோது, இந்து வாரிசுரிமை சட்டத்தின் பிரிவு 8ன்படி நிர்ணயிக்கப்பட்ட இரண்டாம் நிலை வாரிசுகள் பட்டியலில், 2வது ஸ்தான வாரிசுகளில், உயிருடன் இருந்த வரும் மேற்படியாரின் உடன்பிறந்த சகோதர ,சகோதரிகள் என்ற ஸ்தானத்தில் பிரதான மனுவில் கண்ட 1,2 எதிர்மனுதாரர்களான சின்னகந்தசாமி மற்றும் கோசலை என்பவர்கள் மட்டுமே மேற்படி இறந்து போன ராமதாசின் சட்டப்படியான இரண்டாம் நிலை வாரிசுகள் என்றும், அந்த வகையில் அவர்கள் பிரதான மனுவில் சட்டப்படி கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும், அவ்விதம் உயிருடன், சகோதர, சகோதரிகள் எவரும் இல்லாதபோது மட்டுமே, இறந்துபோன சகோதர, சகோதரிகளின் மகன்களோ, மகள்களோ இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8 ன் கீழான இரண்டாம் வாரிசு பட்டியலில் IV ஸ்தானத்தின்படி வாரிசுகளாக சட்டப்படி வர இயலும் என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரர்/ மனுதாரர் பிரதான மனுவில் மேற்படி ராமதாஸ் என்பவரின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் பற்றிய முழு விவரங்களையும், அவர்களில் ராமதாஸ் என்பவர் இறக்கும் காலத்தில் உயிருடன் இருந்து வரும் சகோதர, சகோதரிகள் பற்றிய விபரங்களையும், மேற்படியார் இறப்பதற்கு முன்பே இறந்துபோன சகோதர, சகோதரிகள் பற்றிய விவரங்களையும் முழுமையாக குறிப்பிட்டே தாக்கல் செய்துள்ளார் என்றும், இறந்துபோன ராமதாஸ் என்பவருக்கு மனுதாரர்கள்

சட்டப்படி இரண்டாம் நிலை வாரிசுகள் அல்ல என்றும், எனவே அவர்கள் பிரதான மனுவிற்கு அவசிய கட்சியும் அல்ல என்றும், எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்த உத்தரவிட வேண்டுவதாக வாதிட்டுள்ளார்.

**(iii)** வழக்காவணங்களைப் பரிசீலனை செய்யும்போது, பிரதான வாரிசுரிமை அசல் மனுவினை 1ம் எதிர்மனுதாரர் மனுதாரராக இருந்து, இறந்துபோன ராமதாஸ் என்பவர் 23.06.2023 தேதியில் பிறப்பித்துவைத்த உயில் ஆவணத்தின்படி மனுதாரர் தபசில் 1வது அயிட்டத்தில் எண்ட தொகையினை 3ம் எதிர்மனுதாரரிடமிருந்தும், தபசில் 2வது எயிட்டத்தில் கண்ட தொகையினை 4ம் எதிர்மனுதாரரிடமிருந்தும், தபசில் 3வது அயிட்டத்தில் கண்ட தொகையினை 5ம் எதிர்மனுதாரரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளும்பொருட்டு, வாரிசுரிமை சான்று கேட்டு தாக்கல் செய்துள்ளார். மேற்படி பிரதான மனு நிலுவையில் இருக்கும்பொழுது, மேற்படி இறந்தபோன ராமதாஸின் உடன்பிறந்த சகோதரியான சகுந்தலையின் மகளான இம்மனுவின் 1ம் மனுதாரரையும், இறந்துபோன ராமதாஸின் உடன்பிறந்த சகோதரரான லேட், ஆதிமூலத்தின் மகனான 2ம் மனுதாரரையும் அசல் மனுவில் 6.7 வது புதிய எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்த்து வழக்கினை நடத்த உத்தரவிட வேண்டுவதாகக் கூறி மனுதாரர்கள் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

**(iv)** மனுதாரர்கள் தரப்பு பிரதான வாதமானது, 1வது மனுதாரர், மனுவில் கூறியுள்ள இறந்துபோன ராமதாஸ் என்பவரின் சகோதரி சகுந்தலையின் மகள் என்றும், 2வது மனுதாரர் இறந்துபோன ராமதாஸ் என்பவரின் சகோதரன் ஆதிமூலத்தின் மகன் என்றும், எனவே மனுதாரர்கள் பிரதான மனுவிற்கு அவசியமான கட்சிகள் என்றும், எனவே மனுதாரர்களை பிரதான மனுவில் 6.7 வது எதிர்மனுதாரர்களாக சேர்த்து வழக்கினை நடத்த உத்தரவிட வேண்டும் என்பதாகும். 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு வாதமானது, 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரர் ராமதாஸ் என்றும், அவருடைய மனைவி சீதா என்ற சீத்தம்மாள் 05.02.2022 அன்று இறந்து விட்டதாகவும், அதன் பின்னர் மேற்படி ராமதாஸ் 02.07.2023 அன்று காலமாகிவிட்டதாகவும், அவர்களுக்கு குழந்தை இல்லை என்றும், அவரது இறப்பிற்கு முன்பு 1ம் எதிர்மனுதாரர் பெயரில் அவருடைய அசையும், அசையாச் சொத்துக்களைப் பொறுத்து 23.06.2023 தேதியில் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளதாகவும், அதனைப் பெறுவதன் பொறுட்டு மேற்படி ராமதாஸ் உயிருடன் இருந்த காலத்தில் இருந்த அவருடைய சகோதர, சகோதரிகளையும், உரிய வங்கிகளையும் எதிர்மனுதாரர்களாக சேர்த்து, வாரிசுரிமை சான்று கோரி பிரதான மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் இரண்டாம் நிலை

வாரிசுகள் இல்லை என்றும், எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதாகும்.

**(v)** இரு தரப்பு வாதங்களைப் பரிசீலனை செய்யும்போது, தரப்பினார்களால் கீழ்கண்ட சங்கதிகள்ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

1) பிரதான மனுவில் கூறியுள்ள ராமதாஸ் மற்றும் அவருடைய மனைவி சீதா என்ற சீத்தம்மாள் எவ்வித வாரிசுகளுமின்றி இறந்து விட்டார்கள்.

2) மேற்படி ராமதாஸ் என்பவருக்கு 1ம் எதிர்மனுதாரரின் தந்தையான கிருஷ்ணசாமி, 1ம் மனுதாரரின் தாயாரான சகுந்தலை, 2ம் மனுதாரரின் தந்தையான ஆதிமூலம், 2வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்களான சின்னக்கந்தசாமி, கோசலை ஆகியோர்களும், கந்தசாமி என்பவரும் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள்.

3) மேற்படி ராமதாஸ் உயிருடன் இருந்த காலத்தில் 1ம் எதிர்மனுதாரரின் தந்தையான கிருஷ்ணசாமி, 1ம் மனுதாரரின் தாயாரான சகுந்தலை, 2ம் மனுதாரரின் தந்தையான ஆதிமூலம் மற்றும் கந்தசாமி, அகியோர்கள் இறந்து விட்டார்கள்

4) மேற்படி ராமதாஸ் இறந்த அன்று 2,3 வது எதிர்மனுதாரர்கள் மட்டுமே உயிருடன் இருந்துள்ளார்கள்,

இந்நிலையில், இந்து வாரிசுரிமை சட்டத்தின் பிரிவு 8 ன்படி நிர்ணயிக்கப்பட்ட இரண்டாம் நிலை வாரிசுகள் பட்டியலில், மேற்படி ராமதாஸ் வாரிசுகளின்றி இறந்துள்ள நிலையில், அவர் இறந்த காலத்தில் உயிருடன் இருந்த வரும் மேற்படி ராமதாஸின் உடன்பிறந்த சகோதர ,சகோதரிகள் என்ற ஸ்தானத்தில் இம்மனுவின் 2.3 வது எதிர்மனுதாரர்களான சின்னகந்தசாமி மற்றும் கோசலை என்பவர்கள் மட்டுமே மேற்படி இறந்து போன ராமதாசின் சட்டப்படியான இரண்டாம் நிலை வாரிசுகள் ஆவார்கள். அந்த வகையில் அவர்கள் பிரதான மனுவில் எதிர்மனுதாரர்களாக சட்டப்படி கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள். அதே சமயம் 1ம் மனுதாரரின் தாயாரும், 2ம் மனுதாரரின் தந்தையும், மேற்படி ராமதாஸ் இறப்பிற்கு முன்பே இறந்து விட்டார்கள். எனவே அவர்களின் குழந்தைகளான மனுதாரர்கள் பிரதான மனுவைப் பொறுத்து அவர்கள் இரண்டாம் நிலை வாரிசுகள் இல்லை என்பதால், அவர்கள் பிரதான வழக்கிற்கு அவசியமற்ற கட்சிகள் என்றும், எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கத்தக்கது அல்ல என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது,

முடிவில், இந்த மனுவானது செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகின்றது,.

இவ்வுத்தரவானது, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2025 ம் வருடம் மார்ச் திங்கள் 5 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகின்றது.

MANOJKUMAR S
Digitally signed by MANOJKUMAR S
Date: 2025.03.06 18:24:27 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

தென்காசி.

**<u>மனுதாரார்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் இல்லை</u>**

MANOJKUMAR S
Digitally signed by MANOJKUMAR S
Date: 2025.03.06 18:24:34 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,

தென்காசி.

Additional District Court,
Tenkasi.
I.A,No.2/2024
SOP No. 257/2023
Dated :05/03/2025
Order
Draft/Fair